பராஜ், சுப்ராம், உட்பட 500 க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர்.

மகன் கண்ணன், 32, சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்து தப்பினார்.

ரூ.3 ஆயிரம் அபராதமும், கட்ட தவறினால் மேலும் 6 மாதம் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

# வீட்டு முன் குப்பையா ஆன்லைனில் புகார்

## புதிய 'ஆப்ஸ்' அறிமுகம்

காரைக்குடி,டிச.28—

வீட்டு முன் குப்பை தேங்கினாலோ,குப்பை அள்ள பணியாளர்கள் வரவில்லை என்றாலோ,கழிவு நீர் தேங்கி ரோட்டில் ஓடினாலோ,இனி மனு எழுதி அதிகாரியிடம் கொடுத்து காத்திருக்க வேண்டியதில்லை. ஆன்லைன் ஆப்ஸ் மூலம் நேரடியாக புகார் அளிக்கும் வசதி காரைக்குடி நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் 'ஸ்வச் சர்வக்ஷன்' என்ற தூய்மை நகர வரிசைக்கு காரைக்குடி நகாட்சி பட்டியலிடப்பட்டுள்ளது. அதை முன்னிட்டு 'ஸ்வச்சதா ஆப்' என்ற செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த செயலி மூலம் இறந்து போன விலங்குகள் ரோட்டில் கிடந்தாலோ, கழிவு நீர் தேங்கி ரோட்டில் ஓடினாலோ, குப்பை தொட்டியில் குப்பை அகற்றப்படாமல் இருந்தாலோ, குப்பை வண்டி வராமலிருந்தாலோ, குப்பை எடுக்கும் பணியாளர்கள் வராமல் இருந்தாலோ, பொது கழிப்பறையில் தண்ணீர் வரவில்லை என்றாலோ, பொது கழிப்பறையில் மின்சாரம் வரவில்லை என்றாலோ, அது தொடர்பான புகார்களை இணையம் மூலம் அளிக்கலாம்.

புகார்கள் உடனடியாக நகராட்சி கமிஷனர், பொறியாளர், நகரமைப்பு அலுவலர், சுகாதார பிரிவு ஆய்வாளர்கள், வருவாய்துறை ஆய்வாளர்கள் ஆகியோருக்கு செல்லும். அவர்களது உத்தரவின் பேரில், நகராட்சி துப்புரவு பணியாளர்கள் அப்பகுதி புகார் மீது உரிய நடவடிக்கை எடுத்து, குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு, அதற்கான புகைப்படம், புகார் செய்தவரின் அலைபேசிக்கு அனுப்பப்படும்.

நகராட்சி கமிஷனர் விஜயலட்சுமி கூறும்போது: காரைக்குடி நகரில் தூய்மையை பராமரிக்க மக்கள் தங்களது ஆன்ட்ராய்ட் அலைபேசியில் 'ஸ்வச்சதா ஆப்' செயலியை கூகுள் பிளே ஸ்டோரிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அந்த செயலியை ஆன் செய்து, உங்கள் மொழியை தேர்வு செய்து, அலைபேசி எண்ணை பதிவு செய்து, அதில் ஒரு முறை வரும் பாஸ்வேர்டு எண்ணை பதிந்து, குறைகள் உள்ள பகுதியை தேர்வு செய்ய வேண்டும். குறைகளை போட்டோ எடுத்து போஸ்ட் கம்ளைண்ட் என்ற கட்டளை மூலமாக எங்களுக்கு அனுப்பலாம். அன்றன்று புகார் அன்றன்று சரி செய்யப்படும். இதுவரை 820 பேர் இந்த செயலியை பதிவிறக்கம் செய்துள்ளனர். அனைவரும் இதை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம், என்றார்.

தொழிலாளர்களுக்கு